**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர். கமுதி**

**2026 ஆம் வருடம் ஜூன் மாதம் 10 ம் நாள் புதன்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 61/2020**
**CNR. NO.TNRM070007582020**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கமுதி காவல்நிலையம்<br>குற்ற எண் – 194/2019 |
| எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | லிங்கம் (எ) பாரதி |
| 3. | த/பெ. | ராமர் |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | சாம்பக்குளம் (இருப்பு) நேதாஜி நகர், கோட்டைமேடு, கமுதி |
| 6. | வயது | 30/2019 |
| 7. | சம்பவ நாள் | 21-10-2019 ம் தேதி 03.00 மணி |
| 8. | புகார் தேதி | 21-10-2019 ம் தேதி 14.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 21-10-2019 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 25-10-2019 |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 07-10-2020 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 18-05-2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 03-06-2026 |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:37:38 +0530

<table>
<tr><td rowspan="2">14.</td><td>சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது இதச பிரிவுகள் 454, 380 ன் கீழ்</td></tr>
<tr><td>வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380 ன் கீழ்</td></tr>
<tr><td>15.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>எதிரியின் வருகையின்மையால்</td></tr>
<tr><td>16.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>
<table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>18.05.2026</td><td>18.05.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>18.05.2026</td><td>18.05.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>03.06.2026</td><td>03.06.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17.</td><td>எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) / 351 (1) (b) B.N.S.S Act ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>10-06-2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரி தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட் 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>குவிமுச பிரிவு 320ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு பல்வகை மனு எண். 05/2026, நாள். 18.05.2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இதச பிரிவுகள் 457, 380 ன் கீழான குற்றங்கள் சமரசம் செய்ய இயலாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>20.</td><td>எதிரி/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட் 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>அரசுத் தரப்பில் நிலைய சார்பு ஆய்வாளரை கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யக் கோரி குவிமுச பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு பல்வகை மனு எண். 07/2026, நாள். 03.06.2026 ஆக</td></tr>
</table>



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:37:51 +0530

| | | |
|---|---|---|
| | | கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | எதிரியின் வருகையின்மையால் பிடியாணையை ரத்து செய்யக்கோரி குவிமுச பிரிவு 70(2)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு குற்றப் பல்வகை மனு எண். 03/2025 நாள். 28.10.2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. |
| 22. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி |
| 23. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. M. சேதுபதி |
| 24. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 10-06-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 10-06-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரி குவிமுச பிரிவு 248(1) ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br>இவ்வழக்கில் சி.பி. எண். 134/2019 dt. 28.11.2019ல் கண்ட வழக்குச் சொத்தான ரூ.8000/- மதிப்புள்ள வெள்ளை செவலை கலந்த பொட்டை வெள்ளாடு ஒன்றை நிகர்நிலை |

| | | |
|---|---|---|
| | | புகார்தாரர் கொரோன காலம் என்பதால் வழக்குச் சொத்தை காவல் நிலையத்தில் பெற்றுச் சென்றுள்ளார். தொடர்ந்து வழக்குச் சொத்தை அவரே வைத்துக் கொள்ளவும், மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கு 07-10-2020 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 10-06-2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M. சேதுபதி, B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(10-06-2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1. கடந்த 21.10.2019 ம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு இவ்வழக்கின் புகார்தாரரின் வீட்டு வாசலில் கட்டி கிடந்த வெள்ளை செவலை கலந்த பொட்டை வெள்ளாட்டை எதிரி திருடிச் சென்ற குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவு 454, 380 ன் கீழ் கமுதி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில்



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:38:09 +0530

சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசத்திற்கு பின் 05–06–2023 ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு. 240(1) ன் படி எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380 ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு. 240(2) ன் படி எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு. 242–ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் அ.சா.1 மற்றும் எதிரி சமாதானமாக சென்று விட்டதாக குவிமுச பிரிவு 320 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் இதச பிரிவுகள் 457, 380 ன் கீழான குற்றங்கள் சமரசம் செய்ய இயலாத குற்றங்கள் என்பதால் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>

i. அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.1 சாட்சி பிறழ்சாட்சியாகி சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 கமுதி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர்கள் திரு. முருகநாதன் மற்றும் திருமதி. கவிதா அகியோர்களது கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சார்பு ஆய்வாளர் திரு. முருகநாதன் அவர்கள் 21.10.2019 ம் தேதி 14.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 அளித்த புகார் மனுவைப் பெற்று நிலையக் குற்ற எண்.194/2019 இதச பிரிவுகள் 379 ன் வழக்கு பதிவு செய்தும், அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து வழக்குச் சொத்தை அத்தாட்சியில் கைப்பற்றியும், பின்னர் சிறப்பு சார்பு ஆய்வாளர் பணிமாறுதலாகி சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் திருமதி. கவிதா அவர்களிடம் ஒப்படைத்தும், மேற்படி வழக்குக் கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் – 91 ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். அந்த படிவம் 91 உடன் இணைக்கப்பட்ட கடிதத்தில் அந்த சமயத்தில் கெரோனா தொற்று ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததால் நிகர்நிலை புகார்தாரர் வசம் வழக்குச் சொத்து ஒப்படைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளதாகவும், அத்துடன் புலன்விசாரணை


THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:38:34 +0530

முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

ii. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. **தீர்வுக்குரிய பிரச்சனை :–**

i. எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380 ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:–**

i. அ.சா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 5, 6 வருடங்களுக்கு முன்பு தனது வீட்டின் கொட்டகையில் கட்டி வைத்திருந்த 30 ஆடுகளில் ஒரே ஒரு ஆடு மட்டும் காணாமல் போயிருந்ததாகவும், அக்கம் பக்கம் தேடிப்பார்த்ததாகவும், மதியம் வந்து பார்த்த போது காணாமல் போன ஆடு இருந்ததாகவும், தான் ஆடுகளை தேடிப்பார்த்த போது தனது வீட்டின் அருகே ரோந்து பணியில் இருந்த போலீசாரிடம் மேற்படி விபரத்தை சொன்ன போது போலீசார் தன்னிடம் ஒரு



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:38:42 +0530

வெள்ளை பேப்பரில் கையொப்பம் **(அ.சா.ஆ.1)** பெற்றதாகவும், புகார் மனுவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 ன் சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்ட அ.சா.2 தனது சாட்சியத்தில் சுமார் 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் தாங்கள் வளர்த்த 30 ஆடுகளில் ஒரே ஒரு ஆடு காணாமல் போனதாகவும், பின்னர் அ.சா.1 கண்டுபிடித்து கொண்டுவந்துவிட்டார் என்றும், மற்றபடி வழக்கு சம்மந்தமாக தனக்கு வேறு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதால் இவரும் பிறழ்சாட்சியாக அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இருப்பினும் குறுக்கு விசாரணையிலும் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, இவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

iii. அசா. 3 ஆக விசாரணை செய்யப்பட்ட சார்பு ஆய்வாளர் அவர்கள் முதற்கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் திரு. முருகநாதன் அவர்கள் கடந்த 21.10.2019 ம் தேதி 14.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை **(அ.சா.ஆ.2)** பெற்று நிலையக் குற்ற எண்.194/2019 இதச பிரிவுகள் 379 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (**அ.சா.ஆ.4)** மற்றும் மாதிரி வரைபடம் (**அ.சா.ஆ.5)** தயார் செய்து சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துளளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv. மேலும், அ.சா.3 தனது சாட்சியத்தில் சார்பு ஆய்வாளர் அவர்கள் சம்பவம் நடந்தது உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் கோட்டைமேடு பசும்பொன் தேவர் காலேஜ் அருகே 16.00 மணிக்கு கைது செய்தும், நிலையம் கொண்டு வந்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், எதிரி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து வெள்ளை மற்றும் செவலை கலந்த பொட்டை வெள்ளாடு ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் **(அ.சா.ஆ.7)** தயார் செய்து, பின்னர் பணிமாறுதல் உத்தரவு வந்தபடியால் வழக்குக் கோப்பினை சார்பு ஆய்வாளர் திருமதி. கவிதா அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். சார்பு ஆய்வாளர் திருமதி. கவிதா அவர்கள் வழக்குக் கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்குச் சொத்தை படிவம் –91ன் **(அ.சா.ஆ.8)** மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். அந்த படிவம் 91 உடன் இணைக்கப்பட்ட கடிதத்தில் அந்த சமயத்தில் கொரோனா தொற்று ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததால் நிகர்நிலை புகார்தாரர் வசம் வழக்குச் சொத்து ஒப்படைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் அத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது 28.11.2019 ம் தேதியன்று இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

v. ஆனால் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அ.சா.3 ன் சாட்சியத்தால் எவ்வித பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு


THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:38:55 +0530

நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது இதச பிரிவுகள் 457, 380 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

vi. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி இதச பிரிவுகள் 457, 380 ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 248 (1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

vii. இவ்வழக்கில் சி.பி. எண். 134/2019 dt. 28.11.2019 ல் கண்ட வழக்குச் சொத்தான ரூ.8000/- மதிப்புள்ள வெள்ளை செவலை கலந்த பொட்டை வெள்ளாடு ஒன்றை நிகர்நிலை புகார்தாரர் கொரோனா காலத்தில் வழக்குச் சொத்தை காவல் நிலையத்தில் பெற்றுச் சென்றுள்ளார். தொடர்ந்து வழக்குச் சொத்தை அவரே வைத்துக் கொள்ளவும், மேல்முறையீடு இருப்பின் மேல்முறையீட்டு உத்தரவுப்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 10ம் நாள் புதன்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:39:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. செந்தூர்பாண்டி |
| அ.சா.2 | திருமதி. பொன்னுத்தாய் |
| அ.சா.3 | திரு. கௌதம் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 21.10.2019 | புகார் மனுவில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 21.10.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 21.10.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 21.10.2019 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 21.10.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 21.10.2019 | எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் "என்னை அழைத்துச் சென்றால் நான் திருடிகட்டிப் போட்டிருக்கும் வெள்ளை செவலை கலந்த பொட்டை ஆட்டை அடையாளம் காண்பித்து ஆட்டை தங்களிடம் ஆஜர் செய்கிறேன்" என்றுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.7 | 21.10.2019 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.8 | 21.10.2019 | படிவம் 91 |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள்:–</u>** இல்லை

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u>** இல்லை

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:39:17 +0530

<u>**குறிப்பு :–**</u>

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.10 11:39:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.